**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 404/2017 |
| Deposition Of Witness for | Prosecution PW5<br>Defense<br>Court |
| Name | திரு. சார்லஸ் ராஜா |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2023 |

எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of October 2024.

நான் ராமகிருஷ்ணாபுரத்தில் வசித்து வருகிறேன். கேபிள் ஆப்ரேட்டர் நடத்தி வருகிறேன். காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. வழக்கின் புகார்தாரர் மற்றும் எதிரியை தெரியும். பக்கத்து ஊரை சார்ந்தவர்கள். வழக்கு பற்றி எந்த விபரமும் தெரியாது. வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

14.12.2016 ஆம் தேதி 18.30 மணிக்கு சம்பவ இடமான சுப்பிரமணியன் என்பவரின் தோட்டமும் அதன் சுற்றுபுறங்களையும் விஜயநாராயணம் காவல் உதவி ஆய்வாளர் உங்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்த போது உடன் இருந்து சாட்சியாக கையெழுத்து செய்துவிட்டு தற்சமயம் உண்மைக்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறீர்கள் என்று

சொன்னால் சரியல்ல.